அனுப்புநர்
திருமதி.பா.கலைச்செல்வி
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
கீ.வ.குப்பம்.

பெறுநர்
சார் பதிவாளர்
கீ.வ.குப்பம்

ந.க. ஆ5/2075/2021 நாள்:17.12.2021

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம் 2017 கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியம் அங்கராங்குப்பம் ஊராட்சி கிராம சர்வே எண்:151/5எ-ல் 3.04-ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் விற்பனை செய்யப்படாமல் உள்ள 69-மனை பத்திர பதிவு செய்ய தடையின்மை சான்று வழங்குதல் - சார்பு.

பார்வை: 1)வேலூர் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு)வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண் 1377/2019/வேமா9 நாள்: 22.06.2021.

2)வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் ந.க.ஆ5/1549/2019 நாள்:

3)தலைவர், அங்கராங்குப்பம் ஊராட்சி மன்ற தீர்மான எண்-15 நாள்:03.12.2021

><><><

பார்வை 1-ல் குறிப்பிட்டுள்ள வேலூர் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் அங்கராங்குப்பம் ஊராட்சி கிராம சர்வே எண்:151/5எ-ல் 3.04-ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனை பிரிவில் அமைந்துள்ள விற்பனை செய்யப்படாத 69-மனை அனுமதியின்றி மனை பிரிவுகளை வரன்முறைபடுத்துதல் திட்டம் 2017-ன்கீழ் வரன்முறை செய்து வரன்முறைபடுத்துதல் எண்:54_(R)/2021 வரன்முறைபடுத்தி அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து விற்பனை செய்யப்படாத கீழ்க்குறிப்பிட்டுள்ள 69-மனை வரன்முறைபடுத்துவதற்கான கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் ஆகியவற்றை பார்வை 2-ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தின்படி உரிய கணக்குகளில் செலுத்தி அதற்கான ரசீதுகள் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 3-ல் குறிப்பிட்டுள்ள அங்கராங்குப்பம் ஊராட்சி தீர்மானத்தின்படி இம்மனைகளை வரன்முறைபடுத்துவதை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே கீழ்கண்ட எண்ணுள்ள மனைகளை பத்திரபதிவு செய்ய எவ்வித தடையும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| |
|---|
| விற்கப்படாத மனை எண்ணிக்கை : 69 |
| விற்கப்படாத மனைஎண்கள்:1,2,3,4,5,7,8,9,10,11,16,19-23,27-34,36-38,41-46,48-51,55A,56,57,58, 61-65,67-69,78-89,91-94,96-98. |
| மொத்த பரப்பு: 7142.84 ச.மீ |

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியம்.

17.12.21

நகல்:1. திரு.V.கஜேந்திரன்,
எண்:1/35, பிள்ளையார் கோயில் தெரு,
அங்கராங்குப்பம், கீ.வ.குப்பம் வட்டம்,
வேலூர் மாவட்டம்.
2.இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
வேலூர்-9.

பதிவு அஞ்சல் ஒப்புகைச் சான்றுடன்

**இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**வேலூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்**
முன்னிலை: **திரு.P. ரங்கநாதன்,** B.E., M.Tech (IITD), AITP.,

**ந.க.எண்.1377/2019/வேம3,** **நாள்: 22.06.2021**

* * * * * *

பொருள் : **அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம் – 2017 – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் – வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் வட்டம் / ஊராட்சி ஒன்றியம், அங்கராங்குப்பம் ஊராட்சி / கிராமம், சர்வே எண்.151/5எ–ல் 3.04 ஏக்கர் (12302.44ச.மீ) பரப்பு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவுக்கான வரன்முறைபடுத்திய கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக.**

பார்வை :

1. அரசாணை எண் : 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 04.05.2017.
2. அரசாணை எண் :172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 13.10.2017.
3. அரசாணை எண் :16, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(1), நாள் : 25.01.2021.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் Operational Guideline, Roc. No.13193/2017/LA2, நாள். 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
5. அரசாணை எண் :55, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 02.05.2018.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் Roc. No 13193/2017/LA2, நாள் : 02.05.2018 மற்றும் 07.01.2019.
7. மனுதாரர் திரு.V.கஜேந்திரன், விண்ணப்பம் நாள். 21.05.2019, 06.01.2021 (ம) 15.06.2021.
8. அரசாணை எண் : 21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 05.02.2019.
9. அரசாணை எண். 100, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ந.வ.4(3), நாள். 01.07.2019.
10. தானப்பத்திர ஆவண எண்:1460/2021, நாள்:04.05.2021 ( மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் பதவிக்கு ஒப்படைக்கப்பட்டது ).
11. ONLINE REGISTRATION NO:DTCP/L/0792778/2017, Date.16-11-2018

********

**உத்தரவு :**

**பார்வை (1) (2) மற்றும் (3)–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (4)–ல் கண்ட வழிகாட்டி** நெறிமுறைகளின்படியும் **பார்வை (7)–ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.**

V.Gaj

வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் வட்டம் / ஊராட்சி ஒன்றியம், அங்கராங்குப்பம் ஊராட்சி / கிராமம், சர்வே எண்.151/5எ–ல் 3.04 ஏக்கர் (12302.44ச.மீ) பரப்பு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம. வ. / மா. ந. ஊ. அ. (வேமா) வரன்முறைபடுத்துதல் எண் : 54 (R) / 2021** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : **3.04 ஏக்கர் (அ) 13242.40 ச.அடி (அ) 12302.44 ச.மீ** |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : **99 (1–55, 55எ, 56–98)** |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : **20** |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : **(12, 13, 15, 17, 18, 24–26, 35, 39, 40, 47, 52–55, 59, 60, 90, 95)** |
| விற்கப்பட்ட மனைகளின் மொத்த பரப்பளவு | : **21418.75 ச.அடி** |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : **77** |
| விற்கப்படாத மனை எண்கள் | : **(1–5, 7–11, 14, 16, 19–23, 27–34, 36–38, 41–46, 48–51, 55எ, 56–58, 61–65, 67–89, 91–94, 96–98)** |
| விற்கப்படாத மனைகளின் பரப்பளவு | : **86131.00 ச.அடி** |
| மனுதாரர் உபயோகம் – 1 | : **4862.00 ச.அடி** |
| | : **90993.00 ச.அடி** |

**குறிப்பு :** மனை எண்.06 (ம) 66 மனைப்பிரிவு சாலையாக மாற்றியமைக்கப்பட்டது.

ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை : 89 ( 1-5, 7-55, 55எ, 56-65, 67-69, 78-98 ) + மனுதாரர் உபயோகம்–01

**திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு :**

பூங்கா ( மனை எண்கள். 70–77 ) : **9274.00 ச.அடி – 10.19 %**

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்**

1. பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| அ. இணையதள வாயிலாக மனை ஒன்றுக்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | ONLINE REGISTRATION NO: DTCP/L/0792778/2017, Date.16-11-2018–ன் படி விற்கப்படாத மனைகளுக்கான கூராய்வு கட்டணம் தலா ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் 02 மனைகளுக்கு ரூ.1000/– ONLINE–ல் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள விற்கப்படாத 75 மனைகளுக்கு ரூ.37,500/– சிண்டிகேட் வங்கி கணக்கில் நாள்.30.06.2021–ல் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், வேலூர் அவர்களின் கீழ்காணும் வங்கி கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.–

| | |
|---|---|
| Name of the account holder | Joint Director of Town and Country Planning, Vellore District, Vellore -632 001. |
| Name of Bank | SYNDICATE BANK |
| Account Number | 62552200006638 |
| Name of Branch | VELLORE VOORHEES COLLEGE |

V. Gok

| | |
|---|---|
| Branch Address | 16, Arani Road, Vellore, Tamilnadu-632001. |
| IFSC Code | SYNB0006255 |
| MICR Code | 632025003. |

1. **வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்**

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (பார்வை–8–ல் கண்டுள்ள அரசாணையின்படி பெறப்படவேண்டும்) | வளர்ச்சிக் கட்டணம் (பார்வை–8–ல் கண்டுள்ள அரசாணையின்படி பெறப்படவேண்டும்) |
|---|---|---|---|
| | | | |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு**

| | |
|---|---|
| " 0217 - Urban Development<br>60 - Other Urban Development Schemes<br>800 - Other receipts<br>AT - Receipts under Regularization charges of Unapproved Layout and Plots - DTCP<br>27 - Non Taxation Fees<br>30 - Regularisation<br>DPC : 0217 60 800 AT 2730) " | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

**ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில்** செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

03.11.2018–க்கு பின்னர் கூராய்வு கட்டணம் செலுத்தப்படும் மனைகளுக்கு பார்வை 8–ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

பார்வை 1, 2, 3 மற்றும் 8–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பார்வை 10–ல் கண்ட தானப்பத்திர ஆவண எண்:1460/2021, நாள்.04.05.2021–ன் படி மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஆகியவை மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

<u>நிபந்தனைகள்.</u>

1. அரசாணை (நிலை) எண்.100, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நவ4(3) நாள்.01.07.2019–ன்படி மனுதாரர் பார்வை 9–ல் கண்ட தானப்பத்திர ஆவணங்களின் படி சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தான ஆவணம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஆகியவைகளின் அளவுகள் மற்றும் அமைப்பில் ஏதேனும் மாற்றம் இருப்பின் மனுதாரரே முழு பொறுப்பேற்று சரி செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

2. இம்மனைப்பிரிவு வரைப்படம் புல வரைப்படத்தின் அளவுகளின் படி தயாரிக்கப்பட்டுள்ளது அதன் அடிப்படையிலேயே விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத மனைகளின் அளவுகள் கொடுக்கப்பட்டுள்ளது.

3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

05.07.2021

இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

05/07/24

**இணைப்பு:**

மனைப்பிரிவு வரைபடம் – 2.

**பெறுநர்:**

1. தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்,
அங்கராங்குப்பம் ஊராட்சி,
கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியம்,
கீ.வ.குப்பம் வட்டம்,
வேலூர் மாவட்டம்.

**நகல்:**

| | |
|---|---|
| 1. **மனுதாரர் முகவரி :**<br>திருமதி.V.கஜேந்திரன்,<br>எண்.1/35, பிள்ளையார் கோயில் தெரு,<br>அங்கராங்குப்பம், வடுகந்தாங்கல்,<br>காட்பாடி வட்டம்,<br>வேலூர் மாவட்டம் – 632 204.<br>இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம் – 1. | உள்ளாட்சிக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் விவரங்கள் சமர்ப்பிக்கும் பொருட்டு |
| 2. உதவி இயக்குநர்,<br>நில அளவை (ம) பதிவேடுகள் துறை,<br>வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>வேலூர் மாவட்டம்.<br>**இணைப்பு :** மனைப்பிரிவு வரைபடம் – 1. | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 3. வட்டாட்சியர்,<br>கீ.வ.குப்பம் வட்டம், வேலூர் மாவட்டம்.<br>**இணைப்பு :** மனைப்பிரிவு வரைபடம் – 1. | |
| 4. சார்பதிவாளர், வேலூர் பதிவு மாவட்டம்,<br>கீ.வ.குப்பம் சார்பதிவாளர் அலுவலகம்,<br>வேலூர் மாவட்டம்.<br>**இணைப்பு :** மனைப்பிரிவு வரைபடம் – 1. | |
| 5. வைப்பறை | வரைபடம் (ம) குறுந்தகடு (CD) – 1. |
| 6. நிர்வாகப்பிரிவு / கணக்குப்பிரிவு | தானப்பத்திர ஆவண எண்:1460/2021, நாள்:04.05.2021 அசல் (ம) நகல்–1. |

V. Gek